மக்களவைத் தேர்தல் பார்வையாளர்களுடன் இன்று ஆலோசனை

சென்னை, மார்ச் 10: மக்களவைத் தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பார்வையாளர்களுடன், இந்திய தேர்தல் ஆணையம் திங்கள்கிழமை ஆலோசனை நடத்தவுள்ளது.

சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ள ஆலோசனைக் கூட்டத்தில் வெளி மாநிலங்களுக்கு பார்வையாளர்களாகச் செல்லவுள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

தேர்தலின்போது, பொதுப் பார்வையாளர்களாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், சட்டம் - ஒழுங்கு கண்காணிப்புப் பார்வையாளர்களாக ஐ.பி.எஸ். அதிகாரிகளும் நியமிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில், தமிழகத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் வெளி மாநிலங்களுக்கு பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவருக்குமான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து திங்கள்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் காணொலி வழியாக இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் விளக்கம் அளிக்கவுள்ளனர். மற்ற மாநிலங்களிலும் இதே போன்ற கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

சென்னை - மைசூரு இடையே மேலும் ஒரு 'வந்தே பாரத்'

பிரதமர் நாளை தொடங்கி வைக்கிறார்

சென்னை, மார்ச் 10: சென்னை சென்ட்ரல் - மைசூரு இடையே கூடுதலாக ஒரு 'வந்தே பாரத்' ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மார்ச் 12) தொடங்கி வைக்கவுள்ளார்.

தென்னிந்தியாவின் முதல் 'வந்தே பாரத்' ரயில் சேவையை சென்னை சென்ட்ரல் - மைசூரு இடையே பிரதமர் நரேந்திர மோடி 2022 நவம்பரில் தொடங்கி வைத்தார்.

காட்பாடி, பெங்களூரு வழியாகச் செல்லும் இந்த ரயில் மூலம் வணிகர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் அதிக அளவில் பயனடைகின்றனர்.

கடந்த நிதியாண்டில் மட்டும் சென்னை சென்ட்ரல் -மைசூரு வந்தே பாரத் ரயிலில் சுமார் 130 சதவீத இருக்கைகள் நிரம்பின. இந்த நிலையில், கூடுதலாக ஒரு வந்தே பாரத் ரயிலை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இந்த நிலையில், சென்னை சென்ட்ரல் - மைசூரு இடையே கூடுதலாக ஒரு வந்தே பாரத் ரயிலை இயக்க ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் முதல் சேவையை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மார்ச் 12) ஆமதாபாத்தில் இருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்.

இது குறித்து தெற்கு ரயில்வே சார்பில் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தெற்கு ரயில்வேயில் சென்னை - மைசூரு இடையே புதிய வந்தே பாரத் ரயில், கொல்லம் -திருப்பதி இடையே புதிய விரைவு ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை (மார்ச் 12) காணொலி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்.

மேலும், கேரள மாநிலம் திருவனந்தபுரம் - காசர்கோடு வந்தே பாரத் ரயில் மங்களூரு வரை நீட்டிக்கப்படும் நிலையில் அதன் சேவையையும் பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

இதில், சென்னை - மைசூரு வந்தே பாரத் ரயில் ஏப்.4-ஆம் தேதி வரை சென்னை சென்ட்ரல் -பெங்களூரு இடையே மட்டும் இயக்கப்படும். அதன் பின் மைசூரு வரை நீட்டிக்கப்படும். அதேபோல், திருவனந்தபுரம் - காசர்கோடு இடையே வாரத்தின் 6 நாள்கள் இயக்கப்படும் 'வந்தே பாரத்' ரயில் மங்களூரு வரை நீட்டிக்கப்படவுள்ளது. தொடர்ந்து, ஜூலை 4-ஆம் தேதி முதல் தினசரி ரயிலாக இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கொல்லத்தில் இருந்து திருப்பதிக்கு எர்ணாகுளம், பாலக்காடு, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, சித்தூர் வழியாக புதிய ரயில் சேவை தொடங்கிவைக்கப்படவுள்ளது.

இதன் பயணிகள் சேவை வெள்ளிக்கிழமை (மார்ச் 15) முதல் தொடங்கப்படும். இதில், 7 குளிர்சாதன வசதி கொண்ட பெட்டிகள், 7 படுக்கை வசதி கொண்ட பெட்டிகள், 2 பொதுப் பெட்டிகள் கொண்டு இயக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SHRIRAM Finance

எண்.6, சொரெண்டோ பில்டிங், எல்.பி.சாலை, அடையாறு, சென்னை-600 020, போன்: 044-40414600

சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 (54/2002) மற்றும் பிணைக்காப்பு செயலாக்க விதிகள் 2002-ன் கீழே கையொப்பமிட்ட ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்-ன் (முன்னர் ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிரிவு 13(12) மற்றும் விதி 3-ன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் /ஜாமின்தாரர் / அடமானதாரர் கீழே குறிப்பிட்டுள்ள கடன் ஒப்பந்த தேதியின்படி கடன் கணக்கில் உள்ள நிலுவைத் தொகையை என்டர்பிரைஸ் பைனான்ஸ் கணக்கில் இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதிமிலிருந்து அறுபது நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கோள் காட்டப்பட்டுள்ளபடி கேட்பு அறிவிப்பு அனுப்பிய பிறகு கம்பெனி மனு எண்கள் 69-76/2022-ல் ஒருங்கிணைப்பு திட்டத்தின்படி மாண்புமிகு தேசிய கம்பெனிகள் சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு அமர்களால் 09.11.2022 தேதியிட்ட அதன் உத்தரவின்படி அனுமதிக்கப்பட்ட ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கம்பெனியானது ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது, எனவே இன்றைய தேதி வரை தற்போதைய கடனளித்தவரான ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரர் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால், கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தினடியும், மேற்சொன்ன 8-வது விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 05.03.2024 அன்று அடிமிற்கைபெப்பமிட்டவர் தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார்.

குறிப்பாக கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவர்த்தனை வைத்துக் கொண்டால் அது M/s. ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை என்டர்பிரைஸ் பைனான்ஸ் கணக்கில் அதற்குண்டான பின் வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன்படி கடனீட்டு சொத்துக்களை மீட்டுக் கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

வ.எண்.1 i) திரு.G.ராஜேஷ், த/பெ திரு.கஜேந்திரன், (கடன்தாரர்), ii) திரு.G.கஜேந்திரன், த/பெ திரு.கணேசன், (ஜாமின்தாரர்), iii) திருமதி G.கௌசல்யா, க/பெ திரு.G.கஜேந்திரன், (ஜாமின்தாரர் / அடமானதாரர்), iv) திரு.G.சுரேஷ், த/பெ திரு.கஜேந்திரன், (ஜாமின்தாரர்), v) திருமதி S. நிலவதி, த/பெ திரு.G. சுரேஷ், (ஜாமின்தாரர்), vi) திரு.G. மகேஷ், த/பெ திரு.கஜேந்திரன், (ஜாமின்தாரர்), அனைவரின் முகவரி: பழைய எண்.63N, புதிய எண்.31, SSV கோவில் 1வது தெரு, பெரம்பூர், சென்னை 600011, vii) திருமதி M.ஜாளினி, த/பெ திரு.G.மகேஷ், (ஜாமின்தாரர்), முகவரி: எண்.3/568, 74வது தெரு, 1வது பிளாக், முத்தமிழ் நகர், கொடுங்கையூர், சென்னை-600118. **கேட்பு அறிவிப்பு தேதி: 31.08.2023, கணக்கு எண்: REDHITF1802060001, கடன் ஒப்பந்த தேதி: 07.02.2018,** மொத்த நிலுவைத் தொகை: 30.08.2023 அன்று வரை **ரூ.40,44,040/-** (ரூபாய் நாற்பது இலட்சத்து நாற்பத்தினான்காயிரத்து நாற்பது மட்டும்) மேலும் 31.08.2023 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 05.03.2024 (நேரம்: காலை 11.00 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: தென் சென்னை பதிவு மாவட்டம், ஆவடி சார்பதிவு மாவட்டம், ஆவடி சார்பதிவகம், திருமதி G. கவுசல்யா அவர்களின் பெயரில் உள்ள, ச.எண். 277/3, பட்டா ச.எண். 277/3B-என்டிய, மனை எண். 2, துண்டுரை கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், எல்லைகள்: வடக்கில் மனை எண்.3, தெற்கில் மனை எண்.1, கிழக்கில் 10 அடி அகல சாலை, மேற்கில் ச.எண்.277/2B கொண்ட மனை, அளவுகள்: வடக்கில் 55.17 அடி, தெற்கில் 62.83 அடி, கிழக்கில் 38.42 அடி, மேற்கில் 37.92 அடி, ஆக மொத்தம் 2194 சதுரடி.

வ.எண்.2 i) திரு.குமாருதீன் S, த/பெ. திரு.சாகுல் அமீத், (கடன்தாரர் /அடமானதாரர்), ii) திருமதி ஆமினா K, க/பெ.திரு. குமாருதீன், (ஜாமின்தாரர்), இருவரின் முகவரி: எண்.G 9 &10, SSL கிரீன் பார்க் அபார்ட்மெண்ட், 3வது பிளாக், முகலிவாக்கம் மெயின் ரோடு, மதனந்தபுரம், முகலிவாக்கம் SO, காஞ்சிபுரம்-600125. **கேட்பு அறிவிப்பு தேதி: 23.05.2023, கணக்கு எண்: PERUGTF1809270001, கடன் ஒப்பந்த தேதி: 28.09.2018,** மொத்த நிலுவைத் தொகை: 20.05.2023 அன்று வரை **ரூ.48,01,638/-** (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து ஒராயிரத்து அறுநூற்றி முப்பத்தெட்டு மட்டும்) மேலும் 21.05.2023 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 05.03.2024 (நேரம்: பிற்பகல் 12.35 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: Schedule - A: குன்றத்தூர் மெயின் ரோடு, மதனந்தபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், ச.எண். 67/3A-என்டிய, 1.52 ஏக்கர் (66212 சதுரடி) அளவுள்ள நிலம். எல்லைகள்: வடக்கில் ச.எண். 67/2, தெற்கில் முகலிவாக்கம் மெயின் ரோடு, கிழக்கில் ச.எண். 67/3 கொண்ட R.S. சந்திரன் நிலம், மேற்கில் குன்றத்தூர் மெயின் ரோடு.
Schedule - B: குன்றத்தூர் மெயின் ரோடு, மதனந்தபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், ச.எண். 67/3A-என்டிய, மேற்படி Schedule - A-ல் குறிப்பிடுள்ள மொத்த நிலத்தின் பகுதியான 59517 சதுரடி அளவுள்ள நிலம். எல்லைகள்: வடக்கில் ச.எண். 67/2, தெற்கில் ச.எண். 67/3A-ல் உள்ள திறந்தவெளி இட ஒதுக்கீடு, கிழக்கில் R.S. சுரேஷ் நிலம், மேற்கில் குன்றத்தூர் மெயின் ரோடு.
Schedule - C: தென் சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட SSL கிரீன் பார்க், குன்றத்தூர் மெயின் ரோடு, மதனந்தபுரம், சென்னை - 600116, என்ற முகவரியில், பிளாக்-1, தரை தளத்தில் உள்ள 532 சதுரடி அளவுள்ள கடை எண்.G2 மற்றும் Schedule-B-ல் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் பிரிக்கப்படாத பாகமான 311 சதுரடி நிலம் உட்பட. மேற்படி சொத்தானது குமாருதீன்.S அவர்கள் பெயரில் உள்ளது.

வ.எண்.3 i) திரு. கார்த்திபன் த/பெ. சித்திரேசன் N (கடன்தாரர் /அடமானதாரர்), ii) திருமதி விஜயலட்சுமி க/பெ சித்திரேசன், (ஜாமின்தாரர்), iii) திரு. நவநீத கிருஷ்ணன் த/பெ. சித்திரேசன், (ஜாமின்தாரர்), iv) திரு. பார்த்திபன் த/பெ. சித்திரேசன், (ஜாமின்தாரர்), v) திரு. ராமகிருஷ்ணன் த/பெ. சித்திரேசன், (ஜாமின்தாரர்), அனைவரின் முகவரி: எண் 8, செம்பை நகர், 1வது தெரு, மேற்கு தாம்பரம், காஞ்சிபுரம்-600045, vi) திரு. நரசிம்மன் த/பெ. சித்திரேசன், (ஜாமின்தாரர்), முகவரி: எண் 5/29, 2வது தெரு, பெரியார் நகர், படப்பை, செங்கல்பட்டு-601301, vii) திரு.கோபால கிருஷ்ணன் த/பெ சித்திரேசன், (ஜாமின்தாரர் / அடமானதாரர்), முகவரி: எண் 8, தெற்கு நகர், 1வது தெரு, மேற்கு தாம்பரம், காஞ்சிபுரம்-600045. **கேட்பு அறிவிப்பு தேதி: 28.08.2022, கணக்கு எண்: ADYA1TF1802280009, கடன் ஒப்பந்த தேதி: 28.02.2018,** மொத்த நிலுவைத் தொகை: 29.08.2022 அன்று வரை **ரூ.38,04,633/-** (ரூபாய் முப்பத்திஎட்டு இலட்சத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்திமூன்று மட்டும்) மேலும் 30.08.2022 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 05.03.2024 (நேரம்: பிற்பகல் 01.45 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: தென்சென்னை பதிவு மாவட்டம், தாம்பரம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் கிராமம் மற்றும் தாலுகா, தெற்கு நகர் 1வது தெருவில் உள்ள, மனை எண்.4-ன் கிழக்கு பங்கு பகுதி, மனையின் ச.எண். 353/1A1A1A பகுதி & பழைய சர்வே எண். 353, மனையின் மொத்த விஸ்தீரணமான 3600 சதுரடியில், அடமானம் வைக்கப்பட்டுள்ள விஸ்தீரணம் 1200 சதுரடி. எல்லைகள்: கிழக்கில் மனை எண்.5, மேற்கில் தனசேகரன், அனுமந்த பாண்டியன், ஜெயகரன் ஆகியோர் மனை, வடக்கில் சித்திரேசன் மனை, தெற்கில் மனை எண். 11, அளவுகள்: மேற்கில் 60 அடி, கிழக்கில் 60 அடி, தெற்கில் 20 அடி, வடக்கில் 20 அடி. மேற்படி சொத்தானது திரு. காண்டீபன் & திரு. கோபால கிருஷ்ணன் பெயரில் உள்ளது.

வ.எண்.4 i) திரு. சுபரிநாதன்.C, M/s. சுபரி இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட், (கடன்தாரர் /அடமானதாரர்), ii) திருமதி வடிவழகி.R, க/பெ. திரு. சித்தரஞ்சன், (ஜாமின்தாரர்), iii) திரு.சித்தரஞ்சன், த/பெ.திரு.ராமையன், (ஜாமின்தாரர்), அனைவரின் முகவரி: எண்.13, 7வது அவென்யூ, A செக்டர், சிவசக்தி நகர், அண்ணனூர் ரயில் நிலையம் அருகில், சென்னை - 600 109, iv) திரு.வடிவேல்.P, த/பெ.திரு.பன்னீர்செல்வம், (ஜாமின்தாரர்), முகவரி: ஜடப் - 3, 4/4, எச்.வி.எஃப் எஸ்டேட் ஆவடி, திருவள்ளூர், ஆவடி கேம்ப் , சென்னை - 600054. **கேட்பு அறிவிப்பு தேதி: 17.01.2023, கணக்கு எண்: GEORGTF1709070001, கடன் ஒப்பந்த தேதி: 08.09.2017,** மொத்த நிலுவைத் தொகை: 17.01.2023 அன்று வரை **ரூ.89,80,558/-** (ரூபாய் எண்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்றி ஐம்பத்தெட்டு மட்டும்) மேலும் 18.01.2023 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 05.03.2024 (நேரம்: பிற்பகல் 02.45 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: தென் சென்னை பதிவு மாவட்டம், மைதாப்பேட்டை ஜமீன்பண்ணை-1 சார்பதிவகம், திருமதி G. கவுசல்யா அவர்களின் பெயரில் உள்ள, ச.எண். 277/3, பட்டா ச.எண். 277/3B-என்டிய, மனை எண். 2, துண்டுரை கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், எல்லைகள்: வடக்கில் மனை எண்.3, தெற்கில் மனை எண்.1, கிழக்கில் 10 அடி அகல சாலை, மேற்கில் ச.எண்.277/2B கொண்ட மனை, அளவுகள்: வடக்கில் 55.17 அடி, தெற்கில் 62.83 அடி, கிழக்கில் 38.42 அடி, மேற்கில் 37.92 அடி, ஆக மொத்தம் 2194 சதுரடி.

வ.எண்.5 i) M/s.கூப்பர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பவுன்டேஷன் பிரைவேட் லிட், (கடன்தாரர்), முகவரி: எண்.38, ராமலிங்கம் சாலை, தி.நகர், சென்னை - 600017, 2) திரு. சத்தியநாராயணன் P V, த/பெ. பஞ்செட்டி விஜயராகவம், (ஜாமின்தாரர் / அடமானதாரர்), முகவரி: ப.எண்.15, பு.எண்.24, கந்தர விநாயகர் 2வது தெரு, பொம்மூர், சென்னை - 600011, 3) திரு. ஜனார்த்தனம் P V, த/பெ. விஜயராகவம், (ஜாமின்தாரர்), முகவரி: எண். 31/10, ஹபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை - 600017, 4) திருமதி. ஜெயலட்சுமி, C/o. சத்தியநாராயணன், (ஜாமின்தாரர்), முகவரி: ப.எண்.15, பு.எண்.24, கந்தர விநாயகர் 2வது தெரு, பொம்மூர், சென்னை - 600011, 5) திருமதி. சஜாதா, C/o. ஜனார்த்தனம், (ஜாமின்தாரர்), முகவரி: எண். 31/10, ஹபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை - 600017. **கேட்பு அறிவிப்பு தேதி: 30.12.2022, கணக்கு எண்:TNAGATF1401030004 கடன் ஒப்பந்த தேதி: 03.01.2014,** மொத்த நிலுவைத் தொகை: 29.12.2022 அன்று வரை **ரூ.36,27,084/-** (ரூபாய் முப்பத்தியாறு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எண்பத்தி நான்கு மட்டும்) மேலும் 30.12.2022 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 05.03.2024 (நேரம்: பிற்பகல் 04.30 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: SCHEDULE A
வரிசை எண்.1: வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் சார்பதிவு மாவட்டம், பழைய கதவு எண்.15, புதிய கதவு எண். 24, கந்தரவிநாயகர் கோயில் 2வது தெரு, சிறுவள்ளூர், செம்பியம், பெரம்பூர், சென்னை 600011 என்னும் முகவரியில், ச. எண். 5/83-A, T.S.No: 46/2-என்படி, டவுன் சர்வே நிலப் பதிவேட்டில் உள்ளபடி T.S.No:46/3, பிளாக் எண். 9, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, புரசைவாக்கம்-பெரம்பூர் தாலுகா, சிறுவள்ளூர் கிராமத்தில் அமைந்துள்ள, 813.75 சதுரடி அளவுள்ள மனை, இதன் எல்லைகள்: வடக்கில் கதவு எண்.17, திரு. கோபால் நாயுடு சொத்து, தெற்கில் வரிசை எண்.1 சொத்து, கிழக்கில் கதவு எண்.16/22ல் அமைந்துள்ள சொத்தின் மீதி பகுதி மற்றும் பொதுவழி, மேற்கில் திரு. முருகதாசுக்கு சொந்தமான கதவு எண். 9ல் அமைந்துள்ள சொத்து, அளவுகள்: கிழமேல் வடக்கு மற்றும் தெற்கில் 38 அடி 9 அங்குலம், தென் வடலாக கிழக்கு மற்றும் மேற்கில் 21 அடி, தென் புறந்திக் கந்தரவிநாயகர் கோயில் 2வது தெருவுக்கு செல்லும் 5 அடி அகலம், 48.25 அடி நீளமும் உள்ள பொது வழியில் பிரிக்கப்படாத பாதி பங்கு, ஆக மொத்தம் 935 சதுரடி. இரு வரிசை எண் சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம்: 2871 + 935 = 3806 சதுரடி.

SCHEDULE B
திரு. P.V. சத்தியநாராயணன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து எண்.24/15, கந்தரவிநாயகர் கோயில் 2வது தெரு, பெம்பூர், சென்னை - 600011 என்னும் முகவரியில் தரை தளத்தில் S-1 என்று இலக்கமிட்டுள்ள கார் நிறுத்தம், 441 சதுரடி அளவுள்ள பிரைவேட் டெரஸ் மற்றும் 1405 சதுரடி கட்டுமான விஸ்தீரணம் கொண்ட 2-வது தளத்தில் அமைந்துள்ள S-1 இலக்கமுள்ள, "சாஸ்தா விஜய்" என்று பெயரிடப்பட்ட தன் வீடு என். S-1, மற்றும் Schedule "A"வில் உள்ள வரிசை எண்.1-ல் பிரிக்கப்படாத பங்கு 771 சதுரடி உட்பட.

வ.எண்.6 i) திரு.யோகநாதன் R, S/o. திரு.ரோசி, (கடன்தாரர் /அடமானதாரர்), ii) திருமதி.ஜெயஸ்ரீ R, C/o. திரு.யோகநாதன், (ஜாமின்தாரர்), இருவரின் முகவரி: எண்.125/10, எமரால்டு பிளாட்ஸ், அண்ணா நகர், சென்னை-600040, iii) திருமதி சரளா D, C/o. திரு. துரைசாமி, (ஜாமின்தாரர்), iv) திரு.துரைசாமி G, த/பெ. திரு.கோபால், (ஜாமின்தாரர்) இருவரின் முகவரி: ப.எண்.3/32, பு. எண்.3/108B சந்து தெரு, செருகளத்தூர், குடவாசல் - 612604. **கேட்பு அறிவிப்பு தேதி: 23.11.2022, கணக்கு எண்: KKNBRTF1511300004, கடன் ஒப்பந்த தேதி: 09.12.2015,** மொத்த நிலுவைத் தொகை: 22.11.2022 அன்று வரை **ரூ.33,15,892/-** (ரூபாய் முப்பத்திமூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்றிரண்டு மட்டும்) மேலும் 23.11.2022 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 07.03.2024 (நேரம்: காலை 10.20 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தாலுகா, திருத்தணி சார்பதிவு மாவட்டம், திருத்தணி கிராமத்திற்குட்பட்ட, திரு. யோகநாதன் & திருமதி. சரளா அவர்கள் பெயரில் உள்ள, புஞ்சை சர்வே எண். 25/3D-என்படி, 2688 சதுரடி விஸ்தீரணம் கொண்ட, அதாவது, ஏக்கர் 0.08 சென்ட் மனையின் பகுதியான ஏக்கர் 0.06 1/2 சென்ட் மனை மற்றும் கட்டடம். எல்லைகள்: வடக்கில் ஈப் பாஸ் ரோடு, தெற்கில் குருவப்பா நாயகு நிலத்தில் அமைந்துள்ள பொது வழி, கிழக்கில் நில்லேடி தடம், மேற்கில் கோவிந்த மேஸ்திரி & சாரதாம்பாள் காலி மனை, மேற்படி சொத்தானது திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்டது.

வ.எண்.7 i) திரு. சுதாகர் த/பெதிரு. சேகர், (கடன்தாரர்) முகவரி:எண்.3/424, பழனை கோயில் தெரு, மதனந்தபுரம், முகலிவாக்கம், போரூர், சென்னை-600 125, ii) திருமதி S. பிரியா, க/பெ. திரு.S.சுதாகர், (ஜாமின்தாரர்), எண்.3/424, பழனை கோயில் தெரு, மதனந்தபுரம், போரூர், சென்னை - 600 125, iii) திரு.சேகர், த/பெ. திரு.கன்னியப்பன், (ஜாமின்தாரர்), எண்.3/424, பழனை கோயில் தெரு, மதனந்தபுரம், போரூர், சென்னை- 600 125, iv) திருமதி சத்தியவாணி, க/பெ. திரு.சேகர், (ஜாமின்தாரர் / அடமானதாரர்). எண்.3/424, பழனை கோயில் தெரு, மதனந்தபுரம், போரூர், சென்னை-600 125. **கேட்பு அறிவிப்பு தேதி: 05.08.2021, கணக்கு எண்: PORURTF1804030001, கடன் ஒப்பந்த தேதி: 03.04.2018,** மொத்த நிலுவைத் தொகை: 05.08.2021 அன்று வரை **ரூ.43,10,142/-** (ரூபாய் நாற்பத்திமூன்று இலட்சத்து பத்தாயிரத்து நூற்றி நாற்பத்திரண்டு மட்டும்) மேலும் 06.08.2021 முதல் பின்வட்டி. **சுவாதீன தேதி: 07.03.2024 (நேரம்: பிற்பகல் 02.10 மணி).**

அசையா சொத்துக்களின் விபரங்கள்: தென்சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட , காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் தாலுகா, பரணிபுத்தூர் கிராமம், சர்வே எண். 76/1-என்படி, திருமதி. சத்தியவாணி அவர்கள் பெயரில் உள்ள, 0.36 சென்ட் விஸ்தீரணம் கொண்ட காலி மனை. எல்லைகள்: வடக்கில் சர்வே எண். 28, தெற்கில் சர்வே எண். 76/2, கிழக்கில் சர்வே எண். 75, மேற்கில் மாங்காடு சாலை.

தேதி: 05.03.2024
நேரம்:
வரிசை எண்.1: காலை 11.00 மணி
வரிசை எண்.2: பிற்பகல் 12.35 மணி
வரிசை எண்.3: பிற்பகல் 01.45 மணி
வரிசை எண்.4: பிற்பகல் 02.45 மணி
வரிசை எண்.5: மாலை 04.30 மணி

தேதி: 07.03.2024
நேரம்:
வரிசை எண்.6: காலை 10.20 மணி
வரிசை எண்.7: பிற்பகல் 02.10 மணி

அதிகாரபூர்வ அதிகாரி
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்
கடன் அளித்தவர்

பூங்கா திறப்பு...

பல்லாவரம் பெரிய ஏரிக்கரையில் சனிக்கிழமை நடைபெற்ற சுற்றுச்சூழல் பூங்கா திறப்பு விழாவில் பங்கேற்ற தமிழக சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ராகுல்நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, பேபால் நிறுவன இயக்குநர் ஷீலா பாஸ்கர், சாய் ஷீலா, எக்ஸ்னோரா தலைவர் செந்தூர்பாரி, மக்கள் தொடர்பு அலுவலர் ஆவின் கி.கோபிநாத் உள்ளிட்டோர்.

3,000 புதிய பேருந்துகள் கொள்முதல்: ஒப்பந்தப்புள்ளி கோரியது தமிழக அரசு

சென்னை, மார்ச் 10: போக்குவரத்துக் கழகங்களுக்கு 3,000 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை தமிழக அரசு கோரியுள்ளது.

தமிழக போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளைக் கழித்து, புதிய பேருந்துகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் பணிகளை தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சமீபத்தில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கலின் போது 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்திருந்தார். இந்த நிலையில், பேருந்து கொள்முதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை சாலை போக்குவரத்து நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 1,138 வெளிமாவட்ட பேருந்துகள், 1,190 நகரப்பேருந்துகள், நகரப் பயன்பாட்டுக்கான தாழ்தள வகையிலான 672 பேருந்துகள் என மொத்தம் 3,000 பேருந்துகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. அனைத்தும் பிஎஸ் 6 ரக பேருந்துகளாக இருக்க வேண்டும்.

இது தொடர்பாக பல்வேறு முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய முழுமையான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையை புதன்கிழமையில் முதல் (மார்ச் 13) இணையதளத்தில் (tntenders.tn.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர் சரிந்து தொழிலாளி காயம்

மயானக் கொள்ளை திருவிழாவின்போது சரிந்து விழுந்த தேர்.

வேலூர், மார்ச் 10: வேலூரில் நடைபெற்ற மயானக் கொள்ளை திருவிழாவின்போது 60 அடி உயர தேர் சரிந்து விழுந்ததில் தொழிலாளி ஒருவர் சிக்கி பலத்த காயமடைந்தார்.

வடமாவட்டங்களில் மிகவும் பிரபலமான மயானக் கொள்ளை திருவிழா வேலூர் மாவட்டத்தில் சனிக்கிழமை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

வேலூர் பாலாற்றங்கரையில் நடைபெற்ற மயானக் கொள்ளை விழாவையொட்டி வேலூர், சைதாப்பேட்டை, தோட்டப்பாளையம், மக்கான், சத்துவாச்சாரி, விருதம்பட்டு உள்பட நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள், அங்காள பரமேஸ்வரி அம்மனை அலங்கரித்து பிரமாண்ட தேர்களில் வைத்து ஊர்வலமாக எடுத்து வந்தனர்.

அப்போது, விருதம்பட்டு, கழிஞ்சூர் மோட்டூர் வெண்மணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் சுமார் 60 அடி உயரம் கொண்ட 3 தேர்களில் அங்காள